# விஸ்வஜோதி

தை 1987



இலங்கை விஸ்வகர்ம சங்க வெளியீடு

தனிப்பட்ட விநியோகத்துக்கு மட்டும்

**VISVAJOTHY — Published by**

**the CEYLON VISVAKARMA SANGAM**

- For Private Circulation Only -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விஸ்வகர்ம சங்கம்

## நிர்வாக சபை அங்கத்தவர்கள்

| | |
|---|---|
| போஷகர் — | V. சண்முகராஜா |
| தலைவர் — | S. தியாகராஜா |
| உபதலைவர் — | S. சிவானந்தன் |
| இணைக்காரியதரிசிகள் — | S. செல்வரட்னம் |
| | T. பாலசுப்ரமணியம் |
| பொருளாளர் — | N. விவேகானந்தன் |
| உபபொருளாளர் — | S. ராமச்சந்திரன் |
| வாசிகசாலை அதிபர் — | S. கதிர்வேல் ஆச்சாரி |
| கட்டிட நிர்வாகஸ்தர் — | S. தங்கம் ஆச்சாரி |
| கணக்காளர் — | M. சுப்பையா ஆச்சாரி |
| பத்திரிகை ஆசிரியை — | திருமதி M. தியாகராஜா |
| நிர்வாகசபை அங்கத்தவர்கள் — | S. சங்கர் |
| | T. நமசிவாயம் |
| | S. சிவசுப்ரமணியம் |
| | S. விஸ்வநாதன் |
| | N. சாந்திகுமார் |
| | D. S. ராஜா |
| | K. கதிர்வேல் |
| | A. கணபதி |
| | N. ஜெயகுமார் |
| | K. ஹரி பாஸ்கரன் |
| | P. பட்டக்கண்ணு |
| திருமதி. | P. சண்முகநாதன் |
| ,, | S. ராமசந்திரன் |
| ,, | P. விவேகானந்தன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் விராட் விஸ்வபிரமனே நம

# விஸ்வஜோதி

தீபம் – 1 சுடர் – 1

அன்புடையீர் !

தெய்வ அனுக்கிரகத்தால் நீண்டதொரு இடைவெளிக்குப்பின்னர், இலங்கை விஸ்வகர்ம சங்கம் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது. புதிய உற்சாகத்துடன், புதிய எண்ணங்களுடன், ஆக்கபூர்வமாக இயங்குகின்றது. இத்தருணத்தில் நாம் நம் சங்கத்திற்கு நம் முழு ஆதரவையும், நம்மால் இயன்ற உதவிகளையும் செய்து உற்சாகமளிக்க வேண்டும்.

சங்கம் நமக்கென்ன செய்தது, என்ன சாதித்துவிடப்போகிறது என்று விவாதித்து காலத்தை வீணாக்காமல், ''சங்கத்துக்கும் சமூகத்துக்கும் நாம் என்ன செய்தோம்? என்று எங்களையே கேட்டுப் பார்ப்போம். விடை கிடைக்கும்.

நம்மிடையே விளங்கும் ஏழை - பணக்காரன், படித்தவன் - படிக்காதவன் என்ற பாகுபாடும், தாழ்வு மனப்பான்மையும் நம்மை விட்டு விலக வேண்டும். பணம் உழைப்பினால் விளைவது; படிப்பு ஊக்கத்தினால் வருவது. நம்மிடையே உழைப்போடு நாணயமும், படிப்போடு பண்பாடும் வளரவேண்டும். அப்போதுதான் பிறர் நம்மை மதிப்பார்கள்.

நம் முன்னோர்களால் சமூக ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும், நலனுக்கும் உருவாக்கப்பட்டது இச்சங்கம். அவர்களின் நல்லெண்ணம், குறிக்கோள்கள் ஏமாற்றப்படாமல், நாம் அதற்காவன செய்வோம் என்று ஒன்றாக சங்கல்பம் கொள்ளுவோம். அப்போதுதான் நம்மிடையே பரஸ்பர நம்பிக்கையும் ஒற்றுமையும் ஏற்படும்.

இலங்கை விஸ்வகர்ம சங்க வெளியீடான விஸ்வஜோதி மூலமாக நம் சமூகத்தவர் அனைவரையும் இணைக்க முயல்வதே எங்கள் நோக்கமாகும். 'விஸ்வஜோதி' என்றால் உலகத்தின் ஒளி என்று பொருள்.

சங்க நடவடிக்கைகளை அனைவரும் அறியவும் நம்மவர் கருத்துக்களையும் எண்ணங்களையும் அனைவருடன் பரிமாறிக்கொள்ளவும் ''விஸ்வஜோதி'' உதவும். சமூகநலன், சமய ஈடுபாடு, கலாச்சாரம், தொழில், கல்வி இவை முன்னேறவும் பேணவும் வழிவகுக்க ஏதுவாகும். மொத்தத்தில் குடும்பத்தில் உள்ள அனைவரும் பயன்படக்கூடிய முறையில் 'விஸ்வஜோதி' விளங்கவேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

உங்கள் நல்லெண்ணங்களில் பிரதிபலிப்புக்களை ''விஸ்வஜோதிக்கு'' எழுதியனுப்புங்கள். எழுதும் விஷயங்கள் எளிய நடையில், ரத்தின சுருக்கமாகவும், சங்க, சமூக நலன்களுக்குப் பாதிப்பில்லாமலும், அரசியல் சம்பந்தமில்லாதவையாகவும், எவர் மனதும் புண்படாமலும் இருத்தல் அவசியம். அனுப்பும் கதைகள், கட்டுரைகள், கதைகள் திருப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யனுப்பிவைக்கப்படமாட்டா. அவற்றை அவசியமேற்பட்டால், சுருக்கியோ அல்லது திருத்தியோ வெளியிடும் உரிமை ஆசிரியருக்குண்டு. அனுப்பப்படும் சகலவிடயங்களுக் கடியிலும் அங்கத்தவர் இலக்கம் கையொப்பம், முழுப்பெயர், விலாசம் முதலிய விவரங்கள் தரப்படல் அவசியம்.


விஸ்வஜோதியை வருடம் 4 முறை வெளியிட உத்தேசித்துள்ளோம். விஸ்வ ஜோதியில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்கள் சங்கத்தின் காரிய நிர்வாக சபையுடன் தொடர்பு கொள்ளவும்.

வணக்கம்

— ஆசிரியை —

பஞ்சவர்ணக் கிளி கொஞ்சம் ஐந்துபேர் பரமனுடை
திருக்கிண்ணில் உதயமானுர்
கொஞ்சிவரும் உமையாள் புத்திரர் குருவரனமனு
மயா, சில்பி, வசிஸ்ட விஸ்வக்கியாமா
விஞ்சயுடன் தேவர்கட்குத் தொழில் வகுத்து
விஸ்வப் பிராமணவெனவே நாமம்பெற்று
தஞ்சமுடன் இவர்கள் யாபெர்க்கும் சகல கலைக்குரு
வெனவே சாற்றினரே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவர் முன்னுரை

கனம் பெரியோர்களே, சகோதர சகோதரிகளே —

என்மீது மதிப்பும் நம்பிக்கையும் வைத்து, இலங்கை விஸ்வகர்ம சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுத்தமைக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நானும், எனது காரிய நிர்வாகசபையும் எங்கள் கடமைகளை நல்ல முறையில் செயல்படுத்த உங்கள் ஆதரவும், ஆசிகளும் எங்களுக்கு மிகவும் அவசியம். எங்களை தெரிவுசெய்ததுடன் உங்கள் கடமை, பொறுப்பு முடிந்துவிட்டதாக எண்ணுதீர்கள். சங்கத்தை பலமாக்கி, வளமாக்கி, எங்கள் பணிகளைத் தொடர உங்கள் அனைவரது ஒத்துழைப்பு பெரிதும் தேவை. நடந்தவை கடந்தவைகளாகவும் இனி நடக்கக்கூடியவை நன்மையாகவும் நடைபெற எதிர்காலத்தில் எவ்வித குறைபாடுகள் எதுவுமின்றி ஒற்றுமையாகச் செயல்படுவோம்.

அவ்வித உற்சாகம், ஊக்கம், நல்லெண்ணம், ஆர்வம், செயல்திறன் உள்ள சிலரின் முயற்சிகளின் பிரதிபலிப்புத்தான் இந்த 'விஸ்வஜோதி' வெளியீடு. சங்கத்தின் நடவடிக்கைகளை நீங்களறியவும், உங்கள் நல்லெண்ணங்களை மற்றவர்களுடன் பரிமாறிக் கொள்ளும் கருவியாக 'விஸ்வஜோதி' பயன்பட வேண்டும். விஸ்வஜோதியின் ஒளி எம்மிடையே சுடர்விட்டு பிரகாசிக்க வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்,

சு. தியாகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் நல்லொளி வீசவென விஸ்வஜோதிக்கு வாழ்த்துக்கள்!

**பட்டக்கண்ணு சுப்பையா ஆச்சாரி அன் சன்ஸ்**

102, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு 13.

தொலைபேசி:
22304/23818

---

விஸ்வஜோதிக்கு நல்வாழ்த்துக்கள்!

**நித்தியகல்யாணி ஜுவலர்ஸ்**

40, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

தொலைபேசி:
21617 / 22014

---

எங்கள் நல்லாசிகளும் நல்வாழ்த்துக்களும் விஸ்வஜோதிக்கு

**ரோயல் டெக்ஸ்டைல்ஸ்**

237, மெயின் வீதி,
கொழும்பு 11.

தொலைபேசி:
549944

---

விஸ்வஜோதி வாழ்க! வளர்க!

**ஸ்ரீ முத்துமீனாட்சி ஜுவல்லரி**

152 B செட்டியார் தெரு,
கொழும்பு 11.
தொலைபேசி: 33164 / 29104

இணை நிர்வனங்கள்

செல்வன் ட்ராவல்ஸ் & டுவர்ஸ்
திருமதி A. அழகுராசா
(அடகு வியாபாரம்)


---

விஸ்வஜோதிக்கு நல்லாசிகள்!

**சுபானி ஜுவலஸ்ஸ்**

96, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## போஷகரின் ஆசியுரை

விஸ்வகர்ம பெரியோர்களே, தாய்மார்களே —

இலங்கை விஸ்வகர்ம சங்கம் 66 ஆண்டுகளுக்கு முன் நம் முன்னோர்களால் ஆரம்பிக்கப்பட்டது. பல ஆண்டுகள் சீரும் சிறப்புமாக விளங்கிய இச்சங்கம் சந்தர்ப்பச் சூழ்நிலைகளினால் சிலகாலம் செயற்படாமல் இருந்தது வருந்தவேண்டிய விஷயம்.

இந்தச் சூழ்நிலையில் மீண்டும் சங்கத்தை நல்ல முறையில் செயல்படுத்த நம் சமூக இளையதலைமுறையினர் சிலர் துணிந்து முன்வந்துள்ளது நம் அனைவருக்கும் மகிழ்ச்சியையும் பெருமையும் தருகிறது, இத்தருணத்தில் இவர்களின் ஆர்வத்தையும் நல்லெண்ணத்தையும் உணர்ந்து, பெருமனதுடன் ஊக்கமளிப்பது நமது கடமை. இச்சங்கம் வெற்றிகரமாகச் செயல்பட நாம் முழுமனத்துடன் ஒத்துழைத்தால், இதனால் நன்மையடைபவர்கள் நம் சமூகத்தினரும் நம் சந்ததியினருமே ஆவர்.

இலங்கை விஸ்வகர்ம சங்கத்திற்கும் அதன் காரிய நிர்வாக சபைக்கும் எனது பூரண ஆதரவு உண்டு என்பதையும் விஸ்வஜோதிக்கு என் நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்

வெ. சண்முகராஜா J. P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வ்குல ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் எமது வாழ்த்துக்கள்

**பழமுத்து முத்துக்கருப்பன் செட்டியார் நகை மாளிகை**

36, செட்டியார் தெரு
கொழும்பு 11.

தொலைபேசி எண்
28478 - 25820

விஸ்வஜோதிக்கு நல்லாசிகளுடன்

**சுரேஷ் வீடியோ விஷன்**
180, ஹட்டன் பஜார்,
கொட்டகலை.

விஸ்வஜோதிக்கு வாழ்த்துக்கள்

**பிரயா ஜுவெல்லரி**
106, கண்டி ரோடு,
நுவரஎலியா.
தொலைபேசி (052)2919

விஸ்வஜோதி வாழ்க!

**காயத்ரி ஜுவலர்ஸ்**
45, கன்னரத் தெரு,
கொழும்பு 13.

நமது சமுதாயம் முன்னேற எமது நல்வாழ்த்துக்கள்!

**மாலா ஜுவலரி ஹவுஸ்**
100, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

தொலைபேசி :
25287

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைக்காரியதரிசியின் அறிக்கை

தற்சமயம் இயங்கிவரும் செயல்பாடும், ஆர்வமுமிக்க இலங்கை விஸ்வகர்ம சங்கத்தின் நிர்வாக குழுவினரின் இதயத்திலே தோன்றியதொரு சுடர் வியாபித்து, அது ஒரு "ஜோதியாகி" உங்கள் கரங்களிலே தவழுகின்றது. இந்த ஜோதி சங்கத்தின் எதிர்காலம் ஒளிமயமானதே என்பதற்கோர் நல்ல அறிகுறி. சங்க வரவாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய பொன்னான நாள்.

சிந்தையில் எழுந்த சில நாட்களிலேயே விஸ்வஜோதி சிறப்பாக அமைவதற்கும், வெளியிடுவதற்கும் உழைத்த ஆசிரியை அவர்களுக்கும், பத்திரிகை நிறைவு பெறவும், சிறப்புறவும் கவிதைகள், கட்டுரைகள், செய்திகள், அனுப்பி ஊக்குவித்த அன்பர்கள், அங்கத்தினர்கள், விளம்பரமாகப் பொருளுதவி வழங்கிய பெரியோர்கள் அனைவருக்கும் என்றும் குன்று வணக்கமும் நன்றியும் உரித்தாகுக.

பத்திரிகையின் குறிக்கோள் நம் இனமும் தமிழும் வளரவேண்டும்; வாழவேண்டும், நம் சங்கம் நல்ல பணிகளைச் செய்திட இத்தகையதோர் தொடர்பு சாதனம் வேண்டும் என்பதே.

இதைக் கருத்தில் கொண்டு நம் இனத்தவர்கள் இத்தகைய நல்ல பணிகளுக்கு ஊக்கம் அளித்திடவேண்டும். நல்ல செய்திகளையும் அறிவுமிக்க விஷயங்களையும் தந்திட வேண்டும். விஸ்வஜோதியை நீங்கள் படிப்பதோடு மற்றவர்கள் கைகளிலும் தவழும்படி செய்யவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு விடைபெறுகின்றேன்.

இப்படிக்கு அன்பன்

**S. செல்வரத்தினம்**

இணைக்காரியதரிசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

' விஸ்வஜோதி ' உதயமாகி ஒளி வீச வாழ்த்துகிறோம் !

**K. தங்கையா ஆச்சாரி அன்ட் சன்ஸ்**
19, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு 13.

தொலைபேசி
3 5 1 2 4



எமது இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள் !

**ராம் பிரதர்ஸ்**
140, மெயின் வீதி,
கொழும்பு 11.

தொலைபேசி
20127 - 547698



விஸ்வஜோதிக்கு எனது நல்வாழ்த்துக்கள்

**A. கணபதி ஆச்சாரி**
57, கன்னாரத் தெரு,
கொழும்பு 13.



நல்லாசிகளுடன்

**டாக்டர் N. ஜெயகுமார்**
209, ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு 13.



விஸ்வஜோதி என்றும் ஒளி வீச

**சுஜாதா ஜூவலர்ஸ்**
109, செட்டியார் தெரு,
கொழும்பு 11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைக்காரியதரிசியின் அறிக்கை

நம் முன்னோர்களால் சமூகத்துக்கு நல்லன செய்திடவேண்டும் என்று ஏறக்குறைய 66 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட ''இலங்கை விஸ்வகர்ம சங்கம்' பலகாலமாக செயலற்று இருந்துவிட்டது. ஆனால் இப்போது சமூகத்தின் வளர்ச்சி கருதி சமூக நலனில் அக்கறைகொண்ட ஒரு சிலரின் முயற்சியால் கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி மலர்ந்த புதிய நிர்வாகம், திறமையும் செயலாற்றலும்மிக்க தலைவர் திரு. சு. தியாகராஜா அவர்கள் தலைமையில் வீறுநடைபோட ஆரம்பித்துள்ளது.

மங்காத புகழுடைய விஸ்வகர்ம இனத்தின் சிறப்பினை உலகு அறிவதற்கும் ஒற்றுமை என்கின்ற பலத்தினால் உயர்வு அடைவதற்கும் நமது இலங்கை விஸ்வகர்ம சங்கத்தினால் 'விஸ்வஜோதி என்னும் பெயரைத் தாங்கிய பத்திரிகை- வெளியிடப்படுவது நாம் அனைவரும் பெருமை படக்கூடிய விஷயமாகும் விஸ்வஜோதி என்னும்போது உலகிற்கு ஒளி எனும் பொருள் தெரிகின்றது. ஆதிகாலத்தில் உலகிற்கே ஒளி கொடுத்த நம் இனம் இன்று தன் சிறப்பை உணராமல் மங்கி தத்தளிக்கின்றது. இந் நிலையினை மாற்றியமைக்க இத்தகைய பத்திரிகைகள் தூண்டுகோலாக அமையலாம். ஒரு பத்திரிகை வெளியிடுவதாயின் சிரமம் அதிகம். ஆனாலும் நம் சமூகத்தின் சிறப்பைக் கூறவரும் இப்பத்திரிகைக்கு அனைத்து விஸ்வகர்மாக்களும் பக்கபலமாய் இருத்தல் அவசியம். ஒற்றுமை உண்டாயின் வெற்றி நிச்சயமாகும். நாம் வெளியிடும் விஸ்வஜோதி மலர்ந்து மணம் வீசி எமது சமூக வளர்ச்சிக்கு தூண்டுகோலாகவும் நல்வழிகாட்டவும் எவ்வித இடையூறுமின்றி தொடர்ந்து வெளிவர எல்லாம் வல்ல ஸ்ரீ விராட் விஸ்வபிரம்மத்தின் திருவருள் வேண்டி பிரார்த்தித்து, சமூகத்துக்கு நல்லன செய்ய ஆர்வத்துடன் சேவையாற்றும் பத்திரிகை ஆசிரியை அவர்களுக்கும் என் நல்வாழ்த்துக்கள் கூறி முடிக்கின்றேன்.

இங்ஙனம்

**த. பாலசுப்பரமணியம்**

*இணை காரியதரிசி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வபிரம்மனின் சந்ததியினர்

எழுதியவர்: பாலாம்பிகை நடராஜா

பாரம்பரியப் பெரிய சமூகம் விஸ்வகர்ம சமூகமாகும். வேதகாலம் தொட்டு மிகத்தொன்மையான இனம் விஸ்வகர்ம சமூகம். வேத, புராண இதிகாசங்களிலும், சரித்திர நிகழ்ச்சிகளிலும் இச்சமூகத்தின் சிறப்புகளைக் காணலாம். பிரம்ம, விஷ்ணு, ருத்திரன் என்ற மூன்று தெய்வங்களை, படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய பணிகளுக்கு ஆதிக் கடவுள் தோற்றுவித்தான். படைத்தலுக்குரிய பிரம்மா அகிலமெல்லாம் பரந்து, விரிந்து விராட் விஸ்வபிரம்மமாகத் தோன்றினுர் என்று யஜுர் வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

விஸ்வம் என்ருல் உலகம் என்றும், கர்மா என்ருல் சிருஷ்டிக்கிறவன் என்றும் பொருள்படுகின்றது. பிரம்மன் சிருஷ்டித் தொழிலைச் செய்கின்ருன். விஸ்வகர்மன் ஜெகத்தைச் சிருஷ்டிக்கின்ருன். ஆனுல் விஸ்வகர்மர்கள் உலகைச் சிருஷ்டிக்கின்றவர்கள் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்கள்.

விராட் விஸ்வபிரம்மனின் ஐந்து முகங்களுக்கும் சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்ற பெயர்கள் உண்டு. இவற்றிலிருந்து முறையே மனு விஸ்வகர்மாவான சானகரிஷியும், மயவிஸ்வகர்மாவாகிய சனுதனரிஷியும், துவஷ்டா விஸ்வகர்மாவாகிய அபுவனரிஷியும், சிற்பியாகிய பிரத்னஸரிஷியும், விஷ்வக்ஞாவாகிய சுபர்ணரிஷியும் தோன்றினுர்கள். இவர்களது சந்ததியினரே உலகத்துக்குத் தேவைப்பட்ட ஐந்தொழில்களான இரும்பு, தரு, உலோக, சிற்ப, ஸ்வர்ண வேலைகளைச் செய்யும் மனு, மய, துவஷ்டா, சிற்ப, விஸ்வக்ஞ விஸ்வகர்மாக்களாக விளங்குகின்றனர்,

''இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே
இயந்திரங்களைச் செய்வீரே''

என்று பாடினுர் பாரதியார், கரும்பொன் என்ற அதி அத்யாவசியமான இரும்பின் பயனை உலகத்துக்குத் தந்தவர்கள் மனுத்தொழிலைச் செய்யும் விஸ்வகர்மாக்களே.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்றும் பாரதியார் பாடினுர். உழவுத் தொழிலுக்கு வேண்டிய ஏர்நுகங்கள் ஆனவற்றை உருவாக்கிக் கொடுப்பவர்கள் மனுவிஸ்வகர்மாக்கள். இவர்கள் இன்றி உழவுத்தொழில் செய்யமுடியாது.

" உழவின்றேல் பயிரில்லை; பயிரின்றேல் உணவில்லை;
உணவின்றேல் உயிரில்லை '' என்பது தெரிந்ததே;

மனுவிஸ்வகர்மனின் முக்கியத்துவத்தை இதனுல் அறியலாம். அதுமட்டுமல்லாது தாயையும் சேயையும் வேருகப் பிரிக்கும் கருவிமுதல், விண்ணையளக்கச் செல்லும் ஏவுகணைகளையும் செய்யும் சிறப்பு இவர்களுடையதே, கல்லிலும், மரத்திலும், எல்லா உலோகங்களிலும் கவினுரும் கலையை வடிப்பவன் விஸ்வகர்மன்.

இறைவன் உலாவரும் இணையற்ற சிங்காரத் தேர் முதல், மக்களுக்குத் தேவையான தொட்டில், கட்டில், கலைநுணுக்கமுள்ள ஆலயக் கதவுகள், கட்டிட விட்டங்கள், சட்டங்கள்வரை செய்துதவும் விஸ்வகர்மா மயன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவஷ்டா என்னும் விஸ்வகர்மாக்கள் பஞ்சலோகங்களிலும் வார்பட வேலைகளிலும்

செம்பு, வெள்ளி முதலிய உலோகங்களில் அமைப்பதோடு, பூஜா பாத்திரங்கள், அலங்கார விளக்குகள், ஓங்கார ஒலி கிளப்பும் ஆலய மணிகளும் இவர்கள் படைப்பேயாகும்.

சில்பி விஸ்வகர்மாக்கள் கல்லிலே கலைவண்ணம் தோற்றியவர்கள் இவர்களாலேதான் பாரதமே பெருமை பெற்றது, ஸ்தபதிகள் என்ற சிற்ப விஸ்வகர்மன் பல்லவ, பாண்டிய, சோழ, விஜய, நகர மாமன்னர்கள் எழுப்பிவைத்த அற்புதமான அறநிலை ஓங்கிவளர் ஆலயங்களின் கர்த்தாக்கள் இவர்கள். ஆகம சாஸ்திரங்களை முற்றுக அறிந்தவர்கள். ஆகம முறைப்படி ஆலய கோபுரங்களை, சிற்பங்களை நிர்மானிக்கும் புகழைப் பெற்றவர்கள். சிற்பவிஸ்வகர்மாக்களின் கலைத்திறனின் சான்றுகள் சொல்லில் அடங்கா. கற்றூண்களில் சப்தஸ்வரங்களும், கல் உடுக்கில் நாதம் ஒலித்தல் போன்ற அதிதமான படைப்புகளைச் செய்துள்ளனர்.

இத்தனை அழகுக்கெல்லாம் அழகூட்டும் விஸ்வக்ஞ விஸ்வகர்மன், ஸ்வர்ண ரத்தினங்களோடு புழங்குபவர்கள். தங்கம், வெள்ளியில் இவர்களது கைத்திறனையும் நகாஸ் வேலைகளையும் காணலாம். கோவில் விக்ரகங்களுக்கு, ரத்னுபரணங்களையும் கிரீடங்களையும் நலநலமாகப் படைத்துத்தருவதுடன், அக்னி சாட்சியாக, சபையோர் சாட்சியாக மங்கைக்கு மணமகன் அணிவிக்கும் திருமாங்கல்யம், விஸ்வக்ஞனின் ஆசியுடன் அமைக்கப்படும் புனிதச்சின்னம்.

பூர்வகாலத்திலிருந்தே விஸ்வகர்ம குலத்தவருக்குச் சொந்தமான ஆச்சார்ய குரு பீடங்கள் உள்ளன. இவர்கள் ஆவணி அவிட்டத்தில் பூணூல் அணிந்து, சத்தியாலந்தனம் செய்வது போன்ற சகல ஆசாரங்களையும் அனுஷ்டிப்பவர்கள். குலமேன்மைப்படி உரிய ஆசாரங்களை பலர் இன்றும் கடைபிடித்து வருகின்றனர். இதனுலேயே இவர்கள் ஆசாரி என்று சொல்லப்படுகிருர்கள். இன்று பலர் ஆசாரங்களை கைவிட்டுள்ளது கவலைக்குரிய விஷயம்.

விஸ்வபிராமணர் என்றும் அழைக்கப்படும் இவர்கள் இசைத்துறையிலும் வல்லுனர். இசைக் கருவிகள் அனைத்தையும் படைப்பவர்கள் இவர்களேயாம். கலை செல்வமும் இசை ஞானமும் கலைவாணி இவர்களுக்கு அளித்த கொடையாகும்.

பாரத மானியங்களில் ஆச்சார்லு, ராவ், சர்மா, தெய்வக்ஞ என்றெல்லாம் அழைக்கப்படுகின்றுர்கள். விஸ்வகர்மாக்களுக்கு தனியாக கொடி ஒன்றுள்ளது. ஐவர்ணங்களுடைய இதனை அனுமக்கொடி என்பார்கள்.

ஆண்களோடு பெண்களும் சகல துறைகளிலும் புகழ்பெற்று விளங்கும் விஸ்வகர்மர் மனிதகுலத்தின் முதுகெலும்பாக அமைந்து, என்றும் தம் சேவையை மானிலத்துக்கு அளித்துத் திகல, குலதெய்வமான ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி அருள்புரிவாளாக.

உழுபடையைத் தந்துதவி
பழுதின்றிக் கடனுற்றி
எல்லோரும் வாழுகின்ற
நாட்டையமைத்து
அழகு கலையை வளர்த்து
அறமோங்கிச் செழித்திட
ஆலயங்கள் எழுப்பி
உலகை இயக்கவைக்கும் விஸ்வ
கர்மனின் பெருமை அவர்
புகழும் என்றும் ஓங்கவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வபிரம்ம சமூகமும் அதன் எதிர்கால நிலையும்

இலங்கை மாநகரின் நாகரிக வளர்ச்சியின் முன்னோடிகளும் கலையுலகின் சிற்பிகளுமான விஸ்வபிரம்ம சமூகமாகிய நாம் எங்களை நாங்கள் மதிக்காததால், இன்று பிற சமூகத்தவரைவிட தாழ்ந்தவராக கருதப்படுகின்றோம். இதற்கு அடிப்படை காரணம் எங்கள் முன்னோர்கள் எம் சமூகத்தை நேரிய வழியில் இட்டுச் செல்லாததே எங்கள் சரித்திரம் மறைக்கப்பட்டது. பொருளாதாரம் முடக்கப்பட்டது புகழ் பெற்ற சமூகம் பிற இனங்களால் இகழ்ச்சிக்கு ஆளாக்கப்பட்டது. இதற்கு யார் காரணம் என்று சிந்தியுங்கள் எங்களின் வியர்வைத் துளிகளாலும் கடின உழைப்பின் மிகுதியாலும் முன்னேறியவர்கள் எங்களின் முன்இராஜ நடைபோட்டு எம்மை அடக்கி ஆள்வதற்கு யார் காரணம்?


19ம் நூற்றாண்டிலிருந்து 20ம் நூற்றாண்டுக்கு உட்பட்ட நமது சமூகம் அறிவிழந்து ஆற்றலிழந்து பொருளாதாரப் பொலிவிழந்து பிறரின் கண்டன வார்த்தைகளுக்கு கைகட்டி நிற்பதை நம் கண்முன்னால் காண்கின்றோம். இந்த நிலைமாற நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். ''விஸ்வ ஐக்கியர்'' என்று நம் சமூகத்தவருக்கு ஒரு பெயர் உண்டு. இதன் பொருள் உலகத்தை ஒற்றுமைபடுத்துபவர் எனப்படும். உலகத்தை ஒற்றுமைபடுத்தும் நாம், நமக்குள் ஒற்றுமையிழந்து சீரழிந்து சிதறுண்டு போகிறவர்களாகவே நாம் வாழ்கின்றோம். நமது முன்னோர்கள் இன்றைய சந்ததியாகிய எம்மை பற்றி சிந்தித்திருந்தால் நாங்கள் சுபீட்சமாக வாழ்ந்திருப்போம். எனவேதான் எமது எதிர்கால சந்ததியினரைப் பற்றி நாம் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

முதலில் நாங்கள் எங்களுக்குள் ஒற்றுமைப்படவேண்டும். நமது சந்ததி அறிவுள்ள ஆற்றலுள்ள சந்ததியாக வளர ஒவ்வொரு விஸ்வகர்ம அன்பரும் சிந்திக்க வேண்டும் வசதியுடையவன்-வசதியற்றவன் என்ற பேதங்கள் மாறி, எங்கள்இனத்தில் இடம்பெறும் இன்ப, துன்ப காரியங்களில் நாம் ஒவ்வொருவரும் பங்கெடுக்க வேண்டும். எமது சமூகத்தை வழி நடத்துவதற்கு சங்கங்கள், அமைப்புகள் தோன்றப்படுமாயின் அவற்றைப்பற்றி அலசி ஆராய்ந்து குறைச்சொல்லிக் கொண்டிருப்பதைவிட்டு, அம் மன்றங்கள் நல்ல முறையில் இயங்குவதற்கு தகுந்த ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் நல்கவேண்டும். இன்றைய கால கட்டத்தில் எம்மைப்பற்றி நாம் சிந்திக்காவிட்டாலும் எம் எதிர்கால சந்ததியினரைப் பற்றி சிந்தித்து இச்சங்கங்களைப் செயல்படுத்துதல் வேண்டும். இன்றைய எமது ஒற்றுமையே, எதிர்கால சந்ததியினரின் பலம் பொருந்திய அத்திவாரமாகும் எனவே தீர்க்கமாக சிந்திப்போம். செயல்படுவோம்.


சித்தாந்த ஆய்வாளர், ஆச்சாரிய தீபம்

செஞ்சொல் கொண்டல் கவிஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாதமிரு வெள்ளிக்கிழமை மாலை கமலாமோடி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும் பஜனை நிகழ்ச்சி.
பாட்டு: P. V. ராமன் மிருதங்கம்: S. T. ரமணன் கடம்: K. K. அச்சுதன்
கஞ்சிரா: T. கிரிதரன் ஹார்மோனியம்: R. சுயம்புலிங்க பாகவதர்



*14 - 12 - 1986 காலை ஸ்ரீ கதிரேசன் வீதி அன்னை வேளாங்கண்ணி மாதா திருச்சபை மண்டபத்தில் நடைபெற்ற இலவச வைத்திய சேவை, சமூகசேவை நிகழ்ச்சி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கத்தின் நடவடிக்கைகளும் திட்டங்களும்

பல்லாண்டுகள் செயல்படாமலிருந்த சங்கத்தை மீண்டும் செயல்பட செய்யவேண்டும் என்று ஆர்வமிக்கவர்கள் சிலரின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த 24-4-86ம் திகதி அன்பர் சிலர் ஒன்று கூடி தற்காலிக நிர்வாகசபை ஒன்றை தெரிவுசெய்து, அதைத் தொடர்ந்து, 67வது ஆண்டு பொதுக்கூட்டம் மோடி மண்டபத்தில் 1-6-86ல் கூட்டப்பட்டது. ஆர்வமும் செயல்திறனுமிக்க ஒரு நிர்வாக சபையும், புதிய உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்பட்டு நல்ல முறையில் இலங்கை விஸ்வகர்ம சங்கம் செயல்பட்டு வருகின்றது.

முற்றிலும் புதிய இளம் தலைமைத்துவத்தைக் கொண்ட இந்த நிர்வாக சபையில் சங்கம் சிறப்பாக முன்னேறவேண்டும், கீர்த்திபெறவேண்டும், சமூகத்திற்கு நன்மை கிட்டவேண்டும் என்று ஆர்வமிக்கவர்கள் தம் சொந்த வேலையாகக் கருதி, சங்க வேலைகளுக்காக நேரத்தையும் சிரமத்தையும் பாராமல் பாடுபடுகின்றனர். சேவா மனப்பான்மைமிக்கவர்கள், பொருள் ரீதியாக, இனமாக, உதவியாக அல்லது கடனாகவோ அவ்வப்போது, தேவைக்கு கொடுத்துதவும் தாராள மனப்பான்மை கொண்டவர்கள், நமது சங்க நிர்வாக குழுவினர் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

காலத்திற்கேற்ற முறையில் நம் சங்கம் தூய்மையாகவும் கட்டுப்பாட்டுடனும், நீதியின்முன் அனைவரும் சமம், அனைவருக்கும் சமத்துவம் என்ற ஜனநாயக முறைக்கேற்ப புதிய சங்கப் பிரமாணங்கள் இயற்றப்பட்டு, கடந்த 3-8-86ல் விஷேட பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு, புதிய சங்கப் பிரமாணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. புதிய சங்கப் பிரமாணங்கள் ஏகமனதாக அங்கீகாரம் பெற்றன. எம் இனத்திற்குள் தற்சமயம் ஏற்பட்டுள்ள ஒற்றுமைக்கும் புதிய தலைமைத்துவத்தின் மீதுள்ள நம்பிக்கைக்கும் இது ஒரு மகிழ்ச்சிக்குரிய எடுத்துக்காட்டு,

நம் இனத்தவர்களை ஆத்மீகத் துறையிலும் ஈடுபட செய்யவேண்டும் என்பதற்காக இரண்டு வாரங்களுக்கொருமுறை வெள்ளிக்கிழமைகளில் மோடி பிரார்த்தனை மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு சத்சங்க பஜனை நிகழ்ச்சிகளை நடாத்துகின்றோம். மேற்படி பஜனைகள் சிறப்பாக அமைந்து, பெருந்திரளானவர்கள் கலந்துகொள்கின்றனர். நம் இனத்தவர்களை மட்டுமன்றி, இந்துக்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி அழைத்துள்ளோம். பஜனை இறுதியில் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு பஜனையிலும் வழங்கப்படும் பிரசாதம், பூஜை செலவுகள் யாவும் நிர்வாகசபை அங்கத்தவர்கள், பஜனைக்கொருவராக பொறுப்பேற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக 27-8-86 புதன்கிழமை நமது சங்கத்தின் உபயமாக கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா வெகு விமரிசையாக நடாத்தப்பெற்றது. பெருந்திரளானவர்கள் சமூகமளித்திருந்தனர். காலையில் அபிஷேகமும், மாலையில் விஷேட அலங்காரம், பஞ்சமுக அர்ச்சனை. உள்வீதி உலா போன்ற சிறப்பு அம்சங்களுடன் பூஜை நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் காளாஞ்சி, பொங்கல் பிரசாதம், வழங்கப்பட்டது. அதே வேளையில் மோடி பிரார்த்தனை மண்டபத்தில் விஷேட கிருஷ்ண ஜயந்தி பஜனை நம் குழுவினரால் நடாத்தப்பட்டது.

எமது சங்கத்தின் நிதி நிலைமை மிகவும் குறைவாக உள்ளது. இந்நிலைமையை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. சங்கத்திற்கு நிரந்தர வருமானத்தை ஏற்படுத்துவதற்கென, இதுவரை திரட்டப்பட்ட சந்தாப் பணம், முதலிய தொகைகள் வங்கியில் இருப்புக் கணக்கில் போடப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் எமது மூலதனத்தை பெருக்கும் நோக்கத்துடன் 7 - 9 - 86 அன்று சுகததாச உள்ளரங்கில் ''அப்சராஸ்'' இசைக் குழுவினரின் ''இன்னிசை வார்ப்புகள்'' இலங்கை விஸ்வகர்ம சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது. பெருந்திரளானவர்கள் கலந்து கொள்ள, விழா சிறப்பாக நடைபெற்றது. மூன்று மணி நேரம் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 3 தங்க நாணயங்கள் சீட்டிழுக்கப்பட்டு சபையோருக்குப் பரிசளிக்கப்பட்டன. இவ் விழா இத்தனை சிறப்பாக நடைபெற கலைஞர்களும், நகரசபை உத்தியோகஸ்தர்களும் முக்கியமாக நம் விஸ்வகர்ம சங்க அங்கத்தவர்களும் பெரிதும் ஒத்துழைத்தனர் என்பது மறுக்கமுடியாத விடயமாகும்.

எதிர் காலத்திலும், இப்படியான கலை நிகழ்ச்சிகள் மூலமும், புதிய அங்கத்தவர்களை சேர்ப்பதன் மூலமும், நன்கொடைகள் மூலமும் ஓரளவு பொருளாதார நிலை சீர்படுத்தப்படலாம். இவை தவிர வேறு சில துறைகள் மூலமாகவும் பொருளாதாரம் பெருக திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

சங்க அங்கத்தவர்களுக்கென ஒரு காப்புறுதி முகவர் நியமிக்கப்பட்டுள்ளார். வாகனம், கட்டிடம், வியாபார ஸ்தலங்கள், ஆயுள் அனைத்தும் காப்புறுதி செய்யலாம். இதனால் கிடைக்கும் தரகுப்பணம் முழுவதும் சங்கத்தின் வரவாகும்.

சங்க நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும். நம் இனத்தவர்களின் விசேஷ வைபவங்களுக்கும் ஒரு மண்டபம் தேவைப்படுகின்றது. தற்சமயம் கொழும்பு 13 ஸ்ரீ கதிரேசன் வீதியில் அமைந்திருக்கும் நம் கட்டடம் மிகவும் பழமை வாய்ந்தது. கட்டிடத்தில் - இன்றைய சூழ்நிலையில் மேற்குறிப்பிடப்பட்ட எந்த நிகழ்ச்சியையும் நடத்துவதற்கு ஏற்றதாக இல்லை. மேலும் அதில் குடியிருக்கும் நம் இனத்தவர்களை, சங்க நடவடிக்கைகளுக்கு இடம் தேவை என்றும் விட்டுக்கொடுக்கும்படி கேட்டுள்ளோம். இது விடயமாக சுமுகமான முறையில் பேச்சு வார்த்தைகள் குடியிருப்பாளர்களுக்கும், காரிய நிர்வாக சபைக்குமிடையில் நடைபெற்று வருகின்றன. பேச்சுவார்த்தைகளில் திருப்தியான சுமுகமான முடிவு ஏற்பட்டு கட்டிடம் முழுவதும் பொறுப்பேற்றவுடன், நல்ல முறையில் நம் இனத்தவர்களின் தேவைகளை நிறைவு செய்துகொள்ளக்கூடிய நவீன முறையில் திருத்தியமைக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நம் சங்கத்தின் பொருளாதார நிலை நல்ல நிலைமைக்கு வந்தபின்னர், சங்க கட்டிடம் புனர் அமைத்தவுடன், நம் பெண் பிள்ளைகளுக்கு தையல் வகுப்பு நடாத்தவும், ஆண், பெண் இருபாலாருக்கும் கைத்தொழில் பயிற்சியளிக்கவும், சமய பாடசாலை, பாலர் பாடசாலை, சங்கீத வகுப்பு, நாட்டியப் பயிற்சி நடாத்தவும், வசதியற்ற பிள்ளைகளுக்குப் பாடப் புத்தகங்கள், உபகரணங்கள் வாங்கிக் கொடுப்பதற்கும், நவீன முறைகளில் குலத் தொழில் பயிற்சியளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும். உயர்கல்வி கற்க தகுதியுடைய ஆனால் வசதியற்றவர்களுக்கு உதவி வழங்கவும் மிகவும் வசதியற்றவர்களுக்கு மரண சடங்குகளுக்கு உதவவும் இடமுண்டு. இன, மத, மொழி வளர்ச்சிக்காகவும் கவனம் செலுத்தப்படும்.

இலங்கை விஸ்வகர்ம சங்கம் நடத்திய கலைமகள் விழா 10 - 10 - 86 வெள்ளிக்கிழமை மாலை, கமலா மோடி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழா பூஜையுடன் ஆரம்பமாகியது. தலைவர் திரு. P. S. தியாகராஜா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பிரதேச அபிவிருத்தி அமைச்சர் கௌரவ செ. ராஜதுரை சிறப்பு சொற்பொழிவாற்றினார்.

எமது சமூகத்தவர்களில் ஒருவரும் மூத்த கலைஞருமான திரு. M. R. சுயம்புலிங்க பாகவதருக்கு சங்கத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கி 'விஸ்வபூஷணம்' என்னும் பட்டமும் சூட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அன்னை அருட்பிரவாகம்' என்னும் தலைப்பில் அழகிய தமிழில் சொற்பொழி வாற்றினார் சைவசித்தாந்த காவலர் திரு. C. குருசாமி அவர்கள். அதனைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சி நடைபெற்றது- சத்சங்க பஜனையில் பங்குகொள்ளும் கலைஞர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

14 - 12 - 86 ஞாயிறன்று கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகத்துடன் இணைந்து சமூக சேவை திட்டமொன்று சிறப்பாக நிறைவேறியது. ஸ்ரீ கதிரேசன் வீதி, அன்னை வேளாங்கண்ணி மாதா திருச்சபை மண்டபத்தில் காலை 7.30 மணியிலிருந்து, பிற்பகல் 3 மணி வரை பல்வேறு துறைகளிலும் சமூகசேவை செயல்படுத்தப்பட்டது.

1. ஊனமுற்றோர் இருவருக்கு சக்கர வண்டிகள் அளிக்கப்பட்டன.
2. பெண்களுக்கான சைக்கிள்கள் இரண்டு, புத்தளத்தைச் சேர்ந்த கார்மல் கான்வென்ட் கன்னிகா மடத்துக்கு கொடுக்கப்பட்டன.
3. பாவித்த உடுதுணிகளும், விளையாட்டுப்பொருட்களும் மட்டக்குளி, அன்னை தெரேஸாவின் அனாதை இல்லத்துக்கு வழங்கப்பட்டன.
4. ரூபா 10,500/- பெறுமதியுள்ள உணவுப் பொருட்கள் அன்னை தெரேஸாவின் கதியற்றோர் இல்லத்திற்கு வழங்கப்பட்டன.
5 ரூபா 90/- மதிப்புள்ள உணவுப் பொருட்கள் அடங்கிய 510 பொட்டலங்கள், எல்லா சமூகத்தைச் சேர்ந்த எளியவருக்கும் விநியோகிக்கப்பட்டன. இதற்கான பொருட்கள் அனைத்தும் விஸ்வகர்ம சங்கத்தினரால் நன்கொடையாக சேகரிக்கப்பட்டது.
6. 30 முழு பைன்ட், 17 அரை பைன்ட் இரத்தம், கொழும்பு இரத்த வங்கிக்காக சேகரிக்கப்பட்டது இரத்ததானம் வழங்கிய அனைவருக்கும் உணவு பொட்டலங்களும் காலை சிற்றுண்டியும் கொடுக்கப்பட்டன.
7. கண் சிகிச்சைக்காக 110 நோயாளிகளின் கண்கள் பரிசீலனைச் செய்யப்பட்டு, 50 சோடி மூக்குக்கண்ணாடிகள் அவ்விடத்திலேயே கொடுக்கப்பட்டது.
8. 56 நோயாளிகளை அங்கு சேவையாற்றிய இரு வைத்திய நிபுணர்கள் பரிசீலனை செய்து, 10 நாட்களுக்குத் தேவையான மருந்தும் இலவசமாக விநியோகிக்கப்பட்டது.
9. 103 பேரிடமிருந்து கண்தான சம்மதப் பத்திரங்கள் வாங்கப்பட்டன.
10. ரூபா 3000/, மதிப்புள்ள கிரிக்கட் விளையாட்டு உபகரணங்கள் விவேகானந்தா கல்லூரிக்குப் பரிசளிக்கப்பட்டது.
11. காலிழந்த குஷ்டரோக நோயாளி ஒருவருக்கு முச்சக்கர வண்டி வழங்கப்பட்டது,

7 - 1 - 87 அன்று விவேகானந்த மகா வித்தியாலய மாணவர்களுக்கு இலவச அப்பியாசப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டன. ரூபா 3200/- மதிப்புள்ள அப்பியாசப் புத்தகங்கள் பெருமனதுள்ள நிர்வாக சபை அங்கத்தவர்கள் சிலரின் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

மேலும் ஒரு தொகை மதிப்புள்ள புத்தகங்கள் வட கொழும்பு இந்து பரிபாலன சங்க, சமய பாடசாலைக்கு வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வகலா மண்டபம்

## அதன் தோற்றமும் வருங்காலமும்

இலக்கம் 168, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-13இல் உள்ள கட்டிடம் விஸ்வகர்ம சங்கத்துக்கென எங்கள் முன்னோர்களால் வாங்கப்பட்டது. பழைய பாணியில் கட்டப்பட்ட இக்கட்டிடம் வசதிகள் குறைந்தது; நான்கு குடித்தனங்களைக் கொண்டது. இதனாலேயே நம் முன்னோர்களால் நமது சங்கத்தை நல்ல முறையில் நடத்தமுடியாமற் போய்விட்டது.

இந்நிலைமை மாறாவிட்டால் - கட்டிடம் திருத்தி கட்டப்படாவிட்டால், குடியிருப்பாளர்கள் கட்டிடத்தை மீண்டும் சங்கத்திடம் ஒப்படைக்காவிட்டால் – தற்போது உற்சாகத்துடனும் உண்மையாகவும் செயலாற்றிவரும் நிர்வாகசபையாலும் நம் சமூகத்தின் அவசியமான தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமல் போய்விடும்.

அதனால் நம் சமூகத்தாரின் நலன் கருதி, நம் வருங்கால சந்ததியினரின் முன்னேற்றத்தை கருத்திற் கொண்டு, நம் சமூகத்தவராகிய குடியிருப்பாளர்கள், பொதுச் சொத்தாகிய சங்கக் கட்டிடத்தை மீண்டும் ஒப்படைப்பார்கள் என்ற முழு நம்பிக்கையுடன் கட்டிட சீர்திருத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த இதழின் பின் அட்டையை அலங்கரிப்பது சங்கக் கட்டிடத்தின் எதிர்கால புதிய வெளித் தோற்றம். முதல் தளத்தில் சங்க அலுவலக அறை, பிரார்த்தனை மண்டபம், சாப்பாட்டுக் கூடம், சமையல் கூடம் அமையவுள்ளன. முதலாம் மாடியில் கல்யாண மண்டபமும், ஒப்பனை அறைகளும் இடம்பெறவுள்ளன. இரண்டாம் மாடியில் வாசிகசாலை ஒன்றும், கலைப்பயிற்சி கூடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளன.

நீண்டகால திட்டங்களுடன் கட்டப்படவுள்ள இந்நவீன கட்டிடம் கடவுள் கிருபையால் நிறைவுபெற்றவுடன்,

1) நம் சமூகம் சமய ஈடுபாடுகளில் முறையுடன் பங்குகொள்ளவும், நம் குழந்தைகள் சமய அறிவு பெறவும், நம் பஜனை, பிரார்த்தனை நிகழ்ச்சிகளை அழகுற நடாத்தவும் பிரார்த்தனை மண்டபம் அமையும். தெய்வ விக்கிரகம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டு புரோகிதர் ஒருவரால் தினமும் பூஜை வழிபாடுகள் நடத்தப்படும்.

2) சங்கக் கூட்டங்கள், சங்கக் கட்டிட மேற்பார்வை, சங்க அலுவல்கள் முதலிய சகல தேவைகளையும் சங்க அலுவலகத்தின் மூலம் நடத்திக்கொள்ளலாம். நிரந்தரமாக ஒருவர் இவ்வலுவல்களைக் கவனிக்க நியமிக்கப்படுவார்.

3) சமையல் கூடம் சகல நவீன வசதிகளுடன் 1000 பேருக்கு சமையல் செய்யக்கூடியதாக அமைக்கப்படும். அத்துடன் சமையல் பாத்திரங்கள், பரிமாறும் பாத்திரங்கள் முதலியன தேவைக்கேற்ப தயாராக இருக்கும்.

4) கல்யாண மண்டபம், பலரும் வசதியாக அமரவும், பெண் / பிள்ளை இருபாலாருக்கும் வசதியாக ஒப்பனை அறைகளுடன் அமையவுள்ளது. சடங்குகளுக்குத் தேவையான மணவரை மற்றும் உபகரணங்கள் ஏற்பாடுசெய்யப்படவுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) வாசிகசாலையில் நம் இளைய சந்ததியினருக்கும் முதியோர்க்கும் ஏற்ற புத்தகங்கள் படிப்பதற்கும் வாசிப்பதற்கும் சேர்த்து வைக்கப்படவுள்ளன.

6) கலைக்கூடத்தில் நம் வம்ச கலைகளை இளைய தலைமுறையினரை ஈடுபடுத்தவும், அவற்றை நவீன, இலகுவான, வழிகளில் செய்வதற்கும் பயிற்சியளிக்கப்படும். நம் சமூக பெண்களுக்கு தையல், மற்றும் கைத்தொழில்களில் வகுப்புகள் நடாத்தப்படும்.

இத்தனை அத்தியாவசியமான சமூக, சமய முன்னேற்ற நல்ல திட்டங்களுக்கு தடையாக இருக்காதபடிக்கு, சங்கக் கட்டிடத்தில் தற்சமயம் குடியிருப்பாளராயுள்ளவர்களுக்கு 31.3.87 க்கு முன்னர் அவரவர் குடியிருக்கும் பகுதிகளை காலி செய்து தரும்படி சங்கத் தலைவரால் இறுதி அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. இந் நிலைமையை உணர்ந்து நம் சமூகத்தவரின் வீண்பழிக்கு ஆளாகதபடி, அவர்கள் நடந்துகொள்ளுவார்கள் என எதிர் பார்க்கின்றோம்.

மேற்கூறப்பட்ட திட்டங்கள் யாவும் நனவாகி, நல்ல முறையில் நடக்க ஆண்டவன் அருளை வேண்டி அனைவரும் ஒற்றுமையாக செயல்படுவோம்.



வீட்டில் அடுத்துவரும் விசேஷத்து வீட்டை அலங்கரிக்க அழகான கோலம். உங்கள் திறமைத்தைக் காட்டிப்பாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வஜோதியின் முதலாவது இதழில் இனிப்பாக ஒரு சிற்றுண்டி. பண்டிகை நாட்களில் செய்வதற்குகந்தது. செய்து, ருசித்துப்பாருங்கள்.

## பாதுஷா

தேவையான பொருட்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1 | கப் | — | மைதா மாவு |
| 1¼ | கப் | — | சீனி |
| 1 | சிட்டிகை | — | கேசரி பவுடர் |
| 2 | கரண்டி | — | தேங்காய் துருவல் |
| 1 | சிட்டிகை | — | சோடா |
| 2 | கப் | — | நெய் |

செய்முறை :-

சோடா மாவில் ½ கப் நெய்விட்டு குழைத்து. அதில் கேசரி பவுடர், மைதா மாவையும் போட்டு நன்ருக பிசைய வேண்டும். அவசியமானுல் சிறிது தண்ணீர் சேர்க்கலாம்.

பாத்திரத்தில் நெய்விட்டு காய்ந்ததும், பிசைந்த மாவை சிறிய உருண்டைகளாக்கி லேசாக தட்டி, நடுவில் சற்று அழுத்தி, பொரித்து, எடுக்கவேண்டும். அடுப்பை அதிகம் எரியவிடக்கூடாது.


சர்க்கரையை கம்பிப்பாகு பதமாக இறக்கவேண்டும். பொரித்த பாதுஷாக்களை அதில் போட்டு, சற்று ஊறியதும், தட்டில் அடுக்கி, தேங்காய் துறுவலைத் தூவிவிடவும். கலர் துறுவல் பார்க்க அழகாக இருக்கும்.

---

# தெரியாமலா சொன்னுர்கள்?

- ஆண்டவனுக்கு அஞ்சாதவனைக் கண்டு நாம் அஞ்சவேண்டும்.
- பிரமசாரி மயில்; காதலிக்கும்போது சிங்கம்; கலியாணமானவுடன் கழுதை!
- மனைவியில்லாத மனை, தந்தியில்லாத வீணை.
- கெட்டிக்காரச் சேவல் முட்டைக்குள்ளிருந்தே கூவும்.
- உறவுள்ள இடத்தில் பகையும் இருக்கும்.
- அதிகப் பேச்சு, அதிக மடமை.
- அழகில்லாத பெண் வயிற்றுவலி; அழகுள்ளவள் தலைவலி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமலா மோடி மண்டபத்தில் நடைபெற்ற கலைமகள் விழாவில் மாண்புமிகு அமைச்சர் ராஜதுரை அவர்கள், R. சுயம்புலிங்க பாகவதருக்கு பொன்னாடை போர்த்தி, ''விஸ்வபூஷணம் பட்டமளித்து கௌரவிக்கின்றார்

# தினசரி தியானம்

உறங்கி எழும்போது உள்ளங்கையைப் பார்த்துக்கொண்டு சொல்லுக,

கராக்ரே வஸதே லக்ஷ்மீ கரமத்யே ஸரஸ்வதி
கரமூலேது கௌரீஸ்யாத் ப்ரபாதே கரதர்சனம்

விபூதி அணியும்போது,

பாஸனுத் பஸீதம் ப்ரோக்தம் பஸ்ம கல்மஷ பக்ஷணுத்
பூதி பூதிகரீபும்ஸாம் ரக்ஷா ரக்ஷாகரீ சுபா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள் அங்கத்தவர் பட்டியல்

L - 1 திரு. V. சண்முகராஜா J. P.
L - 2 ,, C. N. ராமசாமி ஆச்சாரி
L - 3 ,, M. சுப்பையா ,,
L - 4 ,, K. முத்தையா ,,
L - 5 ,, K. தங்கையா ,,
L - 6 ,, L. சிவலிங்கம் ,,
L - 7 ,, L. மாடசாமி ,,
L - 8 ,, L. கதிரேசன் ,,
L - 9 ,, S. பாண்டியன் ,,
L - 10 ,, S. வடிவேல் ,,
L - 11 ,, S. மாரிமுத்து ,,
L - 12 ,, P. A. முத்தையா
L - 13 ,, K. V. நாராயணதாஸ்
L - 14 திருமதி A. தியாகராஜா ஆச்சாரி
L - 15 ,, P. சுப்பையா ,,
L - 16 ,, T. கதிர்வேல் ,,
L - 17 ,, P. சண்முகராஜா
L - 18 ,, S. ஜெயராம்
L - 19 ,, K. தங்கையா ஆச்சாரி
L - 20 திரு. M. பட்டக்கண்ணு
L - 21 ,, T. ரட்னராஜா
L - 22 ,, S. தியாகராஜா
L - 23 ,, R. சுப்பையா ஆச்சாரி
L - 24 ,, S. தங்கம் ,,
L - 25 ,, P. பேச்சிமுத்து ,,
L - 26 ,, S. கதிர்வேல் ,,
L - 27 ,, S. கதிர்வேல் ,,
L - 28 ,, சாமி தங்கவேல்
L - 29 ,, K. கதிர்வேல்
L - 30 ,, S. K. நடராஜன்
L - 31 திருமதி P. கதிர்வேல் ஆச்சாரி
L - 32 ,, V. தங்கம் ஆச்சாரி
L - 33 ,, T. சற்குருநாதன்
L - 34 திரு. T. பாலசுப்ரமணியம்
L - 35 ,, T. கிருஷ்ணநாதன்
L - 36 ,, M. முனுசாமி
L - 37 Dr. A. பவளத்துரை
L - 38 Dr. P. K. நடராஜா
L - 39 திரு. P. K. சிதம்பரநாதன்
L - 40 ,, P. K. பாலசுப்ரமணியம்
L - 41 ,, P. K. பஞ்சலிங்கம்
L - 42 ,, P. K. விஸ்வநாதன்
L - 43 ,, P. K. கிருபாகரன்
L - 44 ,, P. சண்முகம்
L - 45 ,, A. மாடசாமி ஆச்சாரி
L - 46 ,, M. ஆறுமுகம்
L - 47 ,, M. தங்கப்பன்
L - 48 ,, M. பரமசிவம்
L - 49 ,, N. சந்திரசேகரன்
L - 50 ,, M ஏகாம்பரம்
L - 51 ,, S. லெட்சுமணன்
L - 52 திருமதி G. பாலசுப்ரமணியம்
L - 53 ,, M. தியாகராஜா
L - 54 திரு. N. விவேகானந்தன்
L - 55 திருமதி P. சண்முகநாதன்
L - 56 Dr. A. C. விஸ்வலிங்கம்
L - 57 திரு. S. சிவசுப்ரமணியம்
L - 58 ,, R. சந்திரசேகரம்
L - 59 ,, N. சாந்திகுமார்
L - 60 ,, S. விஸ்வநாதன்
L - 61 திருமதி P. விவேகானந்தன்
L - 62 திரு. S. சிவானந்தன் J. P.
L - 63 ,, S. சங்கரன்
L - 64 ,, S. முத்துலிங்கம்
L - 65 ,, S. ஜெயசந்திரன்
L - 66 ,, S. ராமச்சந்திரன்
L - 67 திருமதி S. ராமச்சந்திரன்
L - 68 திரு. S. செல்வரட்னம்
L - 69 ,, A. கணபதி ஆச்சாரி
L - 70 ,, N. விவேகானந்தன்
L - 71 ,, N. லோகநாதன்
L - 72 ,, S. ரவீந்திரகுமார்
L - 73 ,, A. C. ராசையா
L - 74 ,, J. ராதாகிருஷ்ணன்
L - 75 ,, S. கதிரேசன்
L - 76 திருமதி C. சிவசுப்ரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய அங்கத்தவர்கள் கவனத்திற்கு

பல சூழ்நிலைகளின் காரணமாக முன்னைய அங்கத்தவர்களின் சரியான விபரங்கள் விண்ணப்பப் படிவங்களை பரிசீலனை செய்யமுடியவில்லை. எனினும் முடிந்தளவு விபரங்களைத் திரட்டி பதிவேடுகள் பராமரிக்கப்படுகின்றன. சிலரின் விபரங்கள் சிலவேளை இல்லாமலும் இருக்கலாம். ஆகவே முன்னால் அங்கத்தவர்கள் தயவு செய்து தங்கள் விபரங்களையும், தற்சமய முகவரியையும் காரியதரிசிக்கு எழுத்து மூலம் அறிவித்து தொடர்புகொள்வதுடன் தங்கள் அங்கத்துவத்தை உறுதிபடுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இலங்கை விஸ்வகர்ம சங்கத்தில் அங்கத்தவராகச் சேர விரும்புவோர் சங்கக் காரியதரிசியுடன் கடிதமூலம் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

அலுவலக விலாசம் :- கௌரவ காரியதரிசி

இலங்கை விஸ்வகர்ம சங்கம்,
102, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு - 13.

2. 'விஸ்வஜோதி'யில் விளம்பரம் செய்ய விரும்புவோர் விபரங்களுக்கு சங்க பொருளாளருடன் தொடர்பு கொள்ளவும்.

விலாசம் :- கௌரவ பொருளாளர்

இலங்கை விஸ்வகர்ம சங்கம்,
40, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.

3. தங்கள் கதை, கட்டுரை, கவிதை முதலியன விஸ்வஜோதியில் பிரசுரிக்க விரும்புவர்கள், பத்திரிகை ஆசிரியருக்கு நேரடியாக அனுப்பி வைக்கலாம்.

விலாசம் :- விஸ்வஜோதி ஆசிரியர்

இலங்கை விஸ்வகர்ம சங்கம்,
102, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு - 13.

4. தங்கள் ஆயுள், வாகன, கட்டிட காப்புறுதி தேவைகளுக்கு சங்க முகவரை, சங்கக் காரியதரிசி மூலமாகத் தொடர்பு கொள்ளவும்.

விலாசம் :- கௌரவ காரியதரிசி


இலங்கை விஸ்வகர்ம சங்கம்,
140, மெயின் வீதி,
கொழும்பு - 11.

5. மாதமிரு பஜனை நிகழ்ச்சிகள் விவேகானந்த மேடு, கமலாமோடி பிரார்த்தனை மண்டபத்தில், மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி 8.00 மணிக்கு பூர்த்தியாகும். அனைவரும் கலந்து ஆண்டவன் திருவருள் பெற அழைக்கப்படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வகலா மண்டபம்

## இலங்கை விஸ்வகர்ம சங்க கட்டிடத்தின் வருங்கால புதிய தோற்றம்



FRONT VIEW OF VISYA KALA MANDAPAM

TRIAD CONSULTANTS
CHARTERED ARCHITECTS & ENGINEERS
117-119, SEA STREET, COLOMBO-11
DRAWN BY : N. GNANESWARAN.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்பாட்டன் பிரின்ஸ் லிமி., 154, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13. தொலைபேசி 23638